**2013 ஆம் ஆண்டுக்கான**
**செயல்நிறைவேற்று அறிக்கையும்**
**வருடாந்த கணக்குகளும்.**

# வர்த்தக திணைக்களம்

# தலைப்பு 295

*4ஆவது மாடி, ரக்ஷண மந்திரய,*
*இல. 21, வொக்ஸோல் வீதி*
*கொழும்பு 02.*
*தொலைபேசி: 011 – 232 9733 / 242 6114*
*தொலைநகல்: 011 – 243 0233*
*மின்னஞ்சல்:fortrade@doc.gov.lk*
*இணையதளம் : :www.doc.gov.lk*

## பொருளடக்கம்


*1.* *அறிமுகம்*

*2.* *இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக மீளாய்வு 2013*

*3.* *இருதரப்பு வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு*

*4.* *வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மீதான கூட்டு ஆணைக்குழு*

*5.* *பல்தரப்பு வர்த்தக உறவுகள்*

*6.* *பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு*

*7.* *வர்த்தக, முதலீடு மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு*

*8.* *உற்பத்தி நாட்டு சான்றிதழ்களின் வழங்குகை*

*9.* *பதவியினர் இடநகர்வுகள்*

*10.* *நிதிக் கூற்று*

## 1.0. அறிமுகம்

***திணைக்களத்தின் செயற்பணி***

***"இலங்கையின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சிக்கு பயன் மிக்கதான சேவையினை வழங்குவதன் மூலம் மொத்த உற்பத்தி, வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு மட்டங்களில் அதிகரிப்பினை ஏற்படுத்துவதனூடாக வாழ்க்கைத் தரங்களை உயர்த்தி வாழ்வின் அதி உன்னத இடத்தை அடைந்து கொள்ளும் நோக்கில் அரசாங்கத்தின் வர்த்தக கொள்கையினை வினைத்திறனுடன் அமுலாக்குவதன் ஊடாக இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக தொடர்புகளை இருதரப்பு, பிராந்திய மற்றும் பல தரப்பு மட்டங்களில் ஊக்குவித்து விருத்தி செய்தலாகும்."***

வர்த்தக திணைக்களமானது (வ.தி), கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் வர்த்தக ரீதியிலான கொள்கை விடயங்களில் மதியுரை வழங்கும் முகமையகமென்ற முக்கியமான பாத்திரத்தினை வகிப்பதுடன் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக உறவுகளின் விருத்தி மற்றும் மேம்பாட்டுக்கான அதிகாரத்தினை அமுல்படுத்தும் முக்கியமான நிறுவனமாகவும் செயற்படுகின்றது. திணைகக்ளத்தினால் இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் வர்த்தக கொள்கை மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் உள்ளடங்கலான தொழிற்பாடுகளும் திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்ட அத்தகைய பணிகளும் சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளன.

- உரிய வரிசை அமைச்சுக்கள் / அதிகாரசபைகள் மற்றும் தனியார் துறை அக்கறைதாரர்களுடன் ஒருங்கிணைந்து இலங்கையின் சர்வதேச வர்த்தக கொள்கையினை வகுத்தலும் அமுல்படுத்துதலும்.
- நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்தியினை விருத்தி செய்யும் வகையில் வெளிநாட்டு வர்த்தக கொள்கை தொடர்பில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சுக்கு மதியுரை வழங்குதல்.
- வெளிநாடுகளிலுள்ள இலங்கை வர்த்தக பிரதிநிதிகளினூடாக வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா துறைகளிலிலுள்ள இலங்கையின் வர்த்தக நலன்களை ஊக்குவித்தல்.

மீளாய்வு காலப்பகுதியில், திணைக்களமானது வெளிநாட்டு வர்த்தக துறை தொடர்பான அரசாங்கத்தின் நோக்கு மற்றும் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்தி நோக்கில் மேற்கொள்ளக்கூடிய முக்கியமான பங்களிப்புக்களின் அடிப்படையில் அதன் வேலை நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்தும் மேற்கொண்டு வந்துள்ளது. எனவே, 2013 ஆம் ஆண்டுக்கான வேலை நிகழ்ச்சித்திட்டம், தற்போதிருக்கும் வர்த்தக உறவுகளை மேலும் வலுப்படுத்துதல், புதிய சந்தைகளையும் உற்பத்திப் பொருட்களையும் ஊக்குவித்தல், சர்வதேச வர்த்தக முறைமையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையின் வினைத்திறன் மிக்க பங்களிப்பினை ஊக்குவித்தல் மற்றும் தென்னாசிய

பிராந்தியத்தில் வர்த்தகத்தில் முன்னணி வகிக்கும் நாடாக இலங்கையை ஊக்குவித்தல் போன்ற நடவடிக்கைகளில் கூடிய கவனம் செலுத்தியுள்ளது. திணைக்களம், அதன் வெளிநாட்டு வர்த்தக பிரதிநிதித்துவத்தினூடாக நேரடி வெளிநாட்டு முதலீடு மற்றும் அவ்வாறே இலங்கை சுற்றுலாத்துறை ஆகியவற்றினை ஊக்குவிப்பது நோக்கில் தேவையான வழிகாட்டுதல்களையும் உதவிகளையும் வழங்கியுள்ளது.

# 2.0 2013 இல் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக மீளாய்வு

## 2.1 ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செயல்நிறைவேற்றம்

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் தரவுகளின்படி, 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையின் மொத்த ஏற்றுமதி சம்பாத்தியமானது 10,009 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்துள்ளதுடன் இது 2012 இல் 9,181 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்துள்ளதுடன் 9.0% அதிகரிப்பினைப் பதிவு செய்துள்ளது. விவசாய உற்பத்திகள் மற்றும் கைத்தொழில் உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி சம்பாத்தியமானது, 6.5% அதிகரிப்பினைப் பதிவு செய்துள்ளன. தேயிலை உள்ளடங்கலான விவசாய உற்பத்திகளின் மொத்த ஏற்றுமதியானது 1,542 மில்லியன் அமெரிக்க டொலரினைப் பதிவு செய்துள்ளதுடன் இது 9.2% அதிகரிப்பினைக் குறிக்கின்ற அதேவேளையில் இறப்பர் ஏற்றுமதியானது 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 43.2% வீழ்ச்சியினைப் பதிவு செய்துள்ளது.

2013 இல் 7,749 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்துள்ள கைத்தொழில் உற்பத்திகளின் ஏற்றுமதிகள் கடந்த வருடத்தில் காணப்பட்டதிலும் பார்க்க 5.1% வளர்ச்சியினைப் பதிவு செய்துள்ளது. 43.4% இற்கும் அதிகமான பங்களிப்பினை வழங்கிய புடவைகள் மற்றும் தைத்த ஆடைகளுக்கான ஏற்றுமதிகள் கைத்தொழில் ஏற்றுமதிகளில் மிகப்பெரிய பங்களிப்பினை வழங்கியுள்ளன. 2012 இல் 3,991 மில்லியன் அமெரிக்க டொலரிலிருந்த தைத்த ஆடைகள் 2013 இல் 4,508 மில்லியன் அமெரிக்க டொலருக்கு அதிகரித்துள்ளதுடன் இது 12.95% வளர்ச்சியினைப் பதிவு செய்துள்ளது. இறப்பரினாலான உற்பத்திப்பொருட்கள் மற்றும் மாணிக்க கற்கள், இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரணங்கள் என்பன கைத்தொழில் ஏற்றுமதியில் முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளன.


அட்டவணை 1

**மொத்த இறக்குமதிகள், ஏற்றுமதிகள் மற்றும் வர்த்தக மீதி : 2009 – 2013**
**(மில்.அ.டொலர் பெறுமதியில்)**

| ஆண்டு | ஏற்றுமதிகள் | வளர்ச்சி% | இறக்குமதிகள் | வளர்ச்சி% | மொத்த வர்த்தகம் | வர்த்தக மீதி |
|---|---|---|---|---|---|---|
| 2009 | 7,118 | -13.0 | 9,767 | -28.0 | 16,885 | -2,648 |
| 2010 | 8,294 | 16.5 | 12,340 | 26.4 | 20,634 | -4,047 |
| 2011 | 10,018 | 20.8 | 19,703 | 59.7 | 29,721 | -9,685 |
| 2012 | 9,181 | -8.4 | 17,889 | -9.2 | 27,069 | -8,708 |
| 2013 | 10,009 | 9.0 | 17,098 | -4.4 | 27,107 | -7,088 |

*மூலம்: இலங்கைச் சுங்கம்*

**வெளிநாட்டு வியாபாரத்தின் திசை 2013**




## 3.0 இருதரப்பு வர்த்தகமும் பொருளாதார ஒத்துழைப்பும்

2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில், இலங்கையானது அதன் பிரதான வர்த்தக பங்காளி நாடுகளுடனும் அவ்வாறே ஏனைய நாடுகளுடனும் இருதரப்பு வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு ஆகியவற்றினை மேம்படுத்துவது தொடர்பில்

கூடிய கவனம் செலுத்தியுள்ளது ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், சீனா, இந்தியா, பாகிஸ்தான் யப்பான், ரஷியா மற்றும் முன்னயை சோவியத் ஒன்றிய நாடுகள், ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு பிராந்தியம் என்பவற்றுடனான வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமைந்துள்ளன. மீளாய்வு காலப்பகுதியில், இலங்கையானது, இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் கைச்சாத்திட்டுள்ள இருதரப்பு சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் சீனாவுடனான உத்தேச சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் என்பவற்றின் கீழ் அதன் வர்த்தக நலன்கள்குறித்து சமமான முக்க்யத்துவத்தினை வழங்கியுள்ளது.

## 3.1 இந்திய – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (இஸ்ப்ரா)

1998, டிசம்பர் 28 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டு 2000, மார்ச் 1 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்த இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது இரண்டு நாடுகளுக்குமிடையில் மேற்கொள்ளப்படும் வர்த்தகத்தில் பரந்தளவிலான பொருட்களுக்கு தீர்வை விலக்களிப்பினை வழங்கி வருகின்றது. இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது 2008 நவம்பரிலிருந்து முழுமையாக அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் சுங்கத் தீர்வையின்றி இந்திய சந்தைக்கு 4000 இற்கும் அதிகமான உற்பத்தி வரிசைகளை ஏற்றுமதி செய்ய முடிந்துள்ளது.

2013 இல் இந்தியாவுக்கான இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளின் பெறுமதியானது 543.3 மில்லியன் அ.டொலராக இருந்துள்ள அதேவேளயில், இந்தியாவிலிருந்து இலங்கைக்கான மொத்த இறக்குமதிகளின் பெறுமதியானது 3092.6 மில்லியனாக இருந்துள்ளதுடன் ஏற்றுமதிகளில் 4% வீழ்ச்சியும் இறக்குமதிகளில் 12% வீழ்ச்சியும் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதே ஆண்டில் இரண்டு நாடுகளுக்குமிடையிலான மொத்த வர்த்தகமானது 3636.0 மில்லியன் அமெரிக்க டொலரினை பதிவு செய்துள்ளதுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 11% இனால் வீழ்ச்சியடைந்தமையினால் பாதகமான வர்த்தக மீதியானது 2549.3 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்துள்ளது. 2013 இல் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கான மொத்த ஏற்றுமதிகளில் 65% இற்கும் மேற்பட்டவை இஸ்ப்ராவின் கீழ் வரிச் சலுகைகளினை அநுபவித்துள்ளதுடன் இந்தியாவிலிருந்து இலங்கைக்கான மொத்த இறக்குமதிகளில் 15% மட்டுமே இஸ்ப்ராவின் கீழ் வரிச் சலுகைகளைப் பெற்றுள்ளன. இந்தியாவிலிருந்தான இலங்கையின் இறக்குமதிகளில் கணிசமானளவு தொகை, இஸ்ப்ராவின் கீழான வரிச் சலுகைகளுக்கு வெளியிலிருந்து கிடைத்துள்ளமையினை இங்கு அவதானிக்க முடிந்துள்ளது. இதனுள் மோட்டார் வாகனங்கள் மற்றும் பெற்றோலிய உள்பத்தி பொருட்கள் உள்ளடங்கலான இயந்திர உதிரிப்பாகங்கள், இயந்திரம் அல்லது உருக்கு மற்றும் அவற்றின் உற்பத்திப் பொருட்கள், மருந்தாக்கல் பொருட்கள், சீனி மற்றும் சீமெந்து என்பன உள்ளடங்குகின்றன. வர்த்தக திணைக்களமானது 2013 இல் இஸ்ப்பராவின் கீழ் மொத்தமாக 11,088 உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களினை வழங்கியுள்ளது. இது 2012 இல் வழங்கப்பட்ட 9,743 உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களுடன் ஒப்பிடுகையில் 13.8% அதிகரிப்பினை பதிவு செய்துள்ளது.

இந்திய இலங்கை கூட்டு ஆணைக்குழுவின் எட்டாவது அமர்வு இந்தியாவின் புதுடில்லி நகரில் 2013 ஜனவரி 22 ஆம் திகதி நடாத்தபட்டது. இந்தக் கூட்டத்தில் இரண்டு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை வலுப்படுத்துவதற்காகவும் இலங்கையின் ஏற்றுமதி திறனினை அதிகரிப்பது தொடர்பில் இணைந்து பணியாற்றவும் விரிவானதும் நிலையானதுமான பொருளாதார ஒத்துழைப்புக்கான விசேட பங்குடமை ஒன்றினை உருவாக்குவது தொடர்பில் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்காகவும் கூட்டு வேலைப்படையொன்றினை தாபிப்பதற்கும் இணங்கிக் கொண்டன.

கொழும்பில், 2013 ஜூன் 24 இலிருந்து 25 வரையில் நடாத்தப்பட்ட வர்த்தக செயலாளர்கள் மட்டத்திலான கூட்டத்தின் போது இஸ்ப்ராவின் கீழுள்ள பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன் இரண்டு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகத்தினை விரிவாக்க்வது தொடர்பிலும் கூடிய கவனம் செலுத்தப்பட்டது. இந்தியாவானது நிபந்தனை எதுவுமின்றி, தீர்வை விலக்களிப்பு வழங்கப்படும் மொத்த கோட்டா பங்கான 8 மில்லியன் தைத்த ஆடைத் துண்டுகளில் தற்போதிருக்கும் 5 மில்லியன் தைத்த ஆடைத் துண்டுகள் மீதான துணி தொடர்பில் எழுகின்ற நிபந்தனைகளை நீக்கியுள்ளது. முன்னதாக விதிக்கப்பட்ட நிபந்தனையானது 5 மில்லியன் தைத்த ஆடைத்துண்டுகளுக்கே ஏற்புடையதாக அமைந்திருந்தது. இந்திய தரப்பும் இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பதப்படுத்தப்பட்ட இறைச்சி மற்றும் பழங்கள் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளையும் நீக்கியுள்ளதாக அறிவித்துள்ளது.

2013 ஜூன் 24 ஆம் திகதி நடாத்தப்பட்ட இலங்கை – இந்திய கூட்டு வேலைப்படையின் (JTF) முதலாவது கூட்டத்தில் இரண்டு தரப்பும் வர்த்தக மற்றும் முதலீடுகளை மேலும் விரிவாக்கும் நோக்குடன் கடல் வழிப்பாதைகளை வெளிப்படுத்தலுவதற்கு உடன்பட்டுக் கொண்டன. இக்கூட்டத்தில் கூட்டு வேலைப்படையானது சுற்றுலாப் பயணிகளின் வருகையினை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

2013 நவம்பரில் இலங்கையானது, இந்தியாவுடனான இருதரப்பு வர்த்தக பேச்சுவார்த்தைகளின் போது இலங்கையினால் பொறுப்பேற்கப்பட்ட உடன்பாடு காணப்பட்ட இணக்கப்பாடுகளுக்கு பயனுறுதி வழங்குவதற்காக 2014 ஆம் அண்டு ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தினூடாக இஸ்ப்ராவின் கீழான அதன் பாதகப் பட்டியலிலிருந்து பத்து (10) பொருட்களை நீக்கியுள்ளது.

## 3.2 பாகிஸ்தான் – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (PSFTA)

2005 ஜீன் 12 ஆம் திகதியிலிருந்து செயற்பாட்டுக்கு வந்த பாகிஸ்தான் – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினத் தொடர்ந்து இரண்டு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு வர்த்தகத்தின் பெறுமதியானது கணிசமானளவு மேம்பாட்டினை அடைந்துள்ளது. பாகிஸ்தான் ஆனது, இந்தியாவினால் தலைமை வகிக்கப்படும்சார்க்

பிராந்தியத்தில் இலங்கையின் இரண்டாவது மிகப்பெரிய வர்த்தகப் பங்காளியாக இருந்து வந்துள்ளது. பாகிஸ்தானுக்கான இலங்கையின் பிரதான ஏற்றுமதிகளினுள் மிளகு, மரக்கறி உற்பத்திகள், பீடி, இலைகள், வெற்றிலை, தேங்காய் சிரட்டைகள், இயற்கை இறப்பர், தெங்கு மற்றும் புத்தம் புதிய மற்றும் உலர்ந்த மரமுந்திரிகை பருப்புக்கள் என்பனவும் உள்ளடங்குகின்றன. PSFTA இன் அமுலாக்கலின் பின்னர் பாகிஸ்தானிய சந்தைக்கு புதிய உற்பத்திப் பொருட் தொகுதியொன்று ஊடுருவியுள்ளதுடன் அவை தைத்த ஆடைகள், MDF பலகைகள், பிஸ்கற்கள், புதிய அன்னாசி, விளையாட்டு பொருட்கள், புளி, உண்ணக்கூடிய எண்ணெய், பீங்கான் மேசைப் பொருட்களும் சமயலறைப் பொருட்களும், பீங்கான் தரை ஓடுகள், தளபாடம், மின்சார ஆளிகளும் சொக்கற்றுக்களும், மூலிகை அழகு சாதன பொருட்கள் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்கள், வர்ணங்கள், கண்ணாடி சித்திரங்கள், தோல் உற்பத்திப் பொருட்கள், குளிரூட்டப்பட்ட மீன், இறால் வகை, கணவாய், நண்டு, வெட்டுப் பூக்கள் மற்றும் இலைத் தொகுதி, இரத்தினக்கற்களும் ஆபரணங்களும் மற்றும் அலங்கார மீன் போன்றவற்றினை உள்ளடக்குகின்றன.

2004 இல் 147 மில்லியன் அமெரிக்க டொலரில் இருந்த இரண்டு நாடுகளுக்குமிடையிலான மொத்த வர்த்தகப் பெறுமதியானது 2013 இல் 462.12 மில்லியன் அமெரிக்க டொலருக்கு அதிகரித்துள்ளது. 2004 இல் 39 மில்லியன் அமெரிக்க டொலரிலிருந்த பாகிஸ்தானுக்காள இலங்கையின் ஏற்றுமதி 2013 இல் 83.05 மில்லியனுக்கு அதிகரித்துள்ளது.

## 3.3 சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உத்தேச சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

சீனாவுக்கும் இலங்கைக்குமிடையிலான வர்த்தக உறவுகள் பல நூற்றாண்டுகளைக் கடந்து நீண்ட வரலாற்றினைக் கொண்டுள்ளது. இறப்பர் மற்றும் அரிசி ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டதிலிருந்து 1952 ஆம் ஆண்டிலிருந்து இரண்டு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக உறவுகளில் புதியதொரு அத்தியாயம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஏற்றுமதி மற்றும் இறக்குமதி பொருட்களுக்கான (மிகவும் சாதகமான நாடு) முறைமையினை வழங்குகின்ற இரண்டு நாடுகளுக்குமிடையிலான பொதுவான தன்மையிலான வர்த்தக உடன்படிக்கையொன்று கைச்சத்திடப்பட்டது. இரண்டு நாடுகளுக்குமிடையிலான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மீதான உடன்படிக்கையானது முறையே 1982 இலும் 1984 இலும் கைச்சாத்திடப்பட்டன. மேற்படி இரண்டு உடன்படிக்கைகளும் 1991 இல் வர்த்தக பொருளாதார ஒத்துழைப்புக்கான சீன – இலங்கை கூட்டுக் குழுவொன்றுக்கு ஒன்றிணைக்கப்பட்டதுடன் அதன் முதலாவது அமர்வானது கொழும்பில் 1992 மார்ச்சில் நடாத்தப்பட்டது. கொழும்பில் 2014 ஏப்ரல் 24 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட 05 ஆவது அமர்வில் வர்த்தகம், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் சுற்றுலாத்துறை ஆகியவற்றினை மேம்படுத்தும் நோக்கில் சீனாவுக்கும் இலங்கைக்குமிடையிலான இருதரப்பு வர்த்தக உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கிலான பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானங்கள்

குறித்தும் கலந்துரையாடப்பட்டன. இரண்டு நாடுகளுக்குமிடையில் முன்னுரிமை வாய்ந்த வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானமாக அமைந்துள்ளது.

இரண்டு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மீதான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று, பின்னர் அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ அவர்களின் சீனாவுக்கான அரசதுறைசார்ந்த விஜயத்தின் போது 2013 மே 27 7 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதுடன் சீன – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் உண்மைத் தன்மை குறித்து ஆய்வு செய்வதற்கும் வர்த்தக மீதியினை மேம்படுத்துகின்ற சீனாவுக்கான இலங்கையின் ஏற்றுமதிகளை விருத்தியடையச் செய்வதிலுள்ள பிரச்சனைகள் குறித்து ஆராய்வதற்கும் கூட்டு தொழிற்படு குழுவொன்றினை தாபிப்பதற்கும் உடன்பாடு காணப்பட்டது. 2013 ஒக்டோபரில் நடாத்தப்பட்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக, இரண்டு நாடுகளுக்குமிடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திடுவதற்குமான பரிந்துரைகளுடன், குறித்த ஆண்டு காலப்பகுதியில் இரண்டு தரப்புக்களுக்கும் உண்மைத் தன்மையினைக் கண்டறியும் ஆய்வறிக்கையானது கூட்டாகவும் அதனைத் தொடர்ந்து திரட்டுஅறிக்கையொன்று குறித்த ஆண்டுகாலப் பகுதியில் சமர்ப்பிக்கப்பட்டன.

## 4.0 வர்த்தகம் பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மீதான கூட்டு ஆணைக்குழு

வர்த்தக திணைக்களமானது, அமைச்சர்கள் மட்டத்தில் நடாத்தப்பட்ட பின்வரும் இருதரப்பு கூட்டு ஆணைக்குழுக்கள்/ குழுக்களின் கீழான வர்த்தகத்துடன் தொடர்புடைய வியடங்களுக்குப் பொறுப்பு வாய்ந்ததாகும்.

- இலங்கை – பங்களாதேஸ்
- இலங்கை – எகிப்து
- இலங்கை – ஈரான்
- இலங்கை – மாலைதீவு
- இலங்கை – ஈராக்
- இலங்கை - பெலாரஸ்
- இலங்கை – சீனா
- இலங்கை – இந்தியா
- இலங்கை – குவைற்
- இலங்கை – பாகிஸ்தான்
- இலங்கை – தாய்லாந்து

## 4.1 பாகிஸ்தான் - இலங்கை கூட்டு பொருளாதார ஆணைக்குழுவின் 11 ஆவது அமர்வு

PSFTA மீதான 5 ஆவது தொழிலுநுட்ப மட்டத்திலான கூட்டம் 2013 ஏப்பிரல் 28 - 29 வரையில் இஸ்லாமாபாத்தில் நடாத்தப்பட்டதுடன் இலங்கை கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளரும் பாகிஸ்தானிய வர்த்தக அமைச்சின் செயலாளரும் தூதுக்குழுவுக்கு தலைமை தாங்கியிருந்தார்கள்.

மேற்படி கூட்டத்தின் போது, PSFTA தொடர்பில் தீர்க்கப்படாத பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன் இலங்கையானது கொசு வர்த்திச் சுருள்கள், போத்தல் குளிரூட்டிகள், மசகு தேங்காய் எண்ணெய், மேலும் வெற்றிலைகள் மற்றும் மூலகை அழகு சாதனப் பொருட்களின் வரிச் சலுகைகள் போன்ற ஐந்து உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை அணுகு முறையினை பாதுகாக்க முடிந்துள்ளது. மேலும், பாகிஸ்தானிய தரப்பானது இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் ஜிஞ்சர் பியர், பீங்கான் உற்பத்திப் பொருட்களுக்கு வரிச் சலுகைகளினை வழங்குவதற்கு உடன்பட்டுக் கொண்டது. கலந்துரையாடலின் போது இரண்டு தரப்பும் பொருட்களின் வர்த்தகம், சுங்க ஒத்துழைப்பு, முதலீடு மற்றும் மேலும் எதிர்மறை நிலையினை வசதிப்படுத்துவதற்கான தன்னியக்க துறை தொடர்பில் கூட்டு தொழிற்படு குழுவொன்றினைத் தாபிப்பதற்கும் இணங்கிக் கொண்டன. அத்துடன் இலங்கை – பாகிஸ்தான் கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுவின் 11 ஆவது அமர்வானது 2013 நவம்பர் 27 – 28 ஆம் திகதியன்று கொழும்பில் நடாத்தப்பட்டதுடன் 5 ஆவது தொழில்நுட்ப மட்டத்திலான கூட்டத்தின் போது எழுப்பப்பட்ட விடயங்கள் புதியதொரு வழங்கலின் மூலம் தீர்வு காணப்பட்டுள்ளது.

## 4.2 வர்த்தக பொருளாதார ஒத்துழைப்பு மீதான இலங்கைக்கும் பெலாரஸுக்குமிடையிலான உடன்படிக்கை

இரண்டு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பினை மேலும் வலுப்படுத்தும் பொருட்டு இலங்கைக்கும் பெலாரஸுக்குமிடையில் இருதரப்பு வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்றினை மேற்கொள்வதற்கு பெலாரஸ் அரசாங்கமானது உத்தேசித்துள்ளது. அதற்கிணங்க, மேற்குறித்த உடன்படிக்கையானது 2013 ஆகஸ்ட் 25 - 28 ஆம் திகதி வரையில் அதிமேதகு இலங்கை ஜனாதிபதி அவர்களின் பெலாரஸுக்கான அரச துறை விஜயத்தின் போது கைச்சாத்திடப்பட்டது.

# 5.0 பலதரப்பு வர்த்தக உறவுகள்

இலங்கையின் பலதரப்பு வர்த்தக உறவுகள் உலக வர்த்தக நிறுவனத்தின் (WTO) மீது கூடிய அக்கறையினைக் காட்டியுள்ளன. இலங்கையானது வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகள் மாநாடு (UNCTAD), உலக புலமைச் சொத்துக்கள்

நிறுவனம் (WIPO), சர்வதேச வர்த்தக நிலையம் (ITC) மற்றும் WTO சட்டவிதிக்கான மதியுரை நிலையம் (ACWL) ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வருகின்றது.

## 5.1 உலக வர்த்தக நிறுவனம் (உவநி)

2013 டிசம்பரில் நடாத்தப்பட்ட உலக வர்த்தக நிறுவனத்தின் 9 ஆவது அமைச்சர்கள் மட்டத்திலான மாநாட்டின் போது உறுப்பினர்கள், வர்த்தக வசதிப்படுத்தல்கள், விவசாயம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான விடயங்களில் பல்வேறு தீர்மானங்களைக் கொண்டிருக்கும் “பாலி பொதி” இனை பின்பற்றியிருந்தார்கள். பாலி பொதியானது 1995 இல் உலக வர்த்தக நிறுவனம் தாபிக்கப்பட்டதிலிருந்து உறுப்பினர்களின் பின்பற்றப்படும் முதலாவது வர்த்தக பொதியாகும். குறிப்பாக மிக முக்கியமான வெளியீடாக, வசதிப்படுத்தல்கள் மீதான உடன்படிக்கையினைப் பின்பற்றுதல், உறுப்பு நாடுகளின் சுங்க மற்றும் எல்லை நடைமுறைகளினை ஒத்துசைவாகவும் சீராகவும் மேற்கொள்ளும் நோக்கிலான பலதரப்பு உடன்படிக்கைகளைப் பின்பற்றுதல், உறுப்பு நாடுகளின் சுங்க மற்றும் கட்டணங்கள்தொடர்பான தற்போதைய கடப்பாட்டினை விரிவாக்குதல், ஒழுங்குமுறைகள், வெளிப்படைத்தன்மை மற்றும் சுதந்திரமாக கடந்து செல்லுதல் போன்றவை தொடர்பில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. இலங்கையானது, இலங்கை சுங்கம் மற்றும் அதன் நிரந்தர தாரகங்களினூடாக வர்த்தக வசதிப்படுத்தல்கள் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் அக்கறையுடன் ஈடுபட்டு வந்துள்ளது

விவசாயத்தில் விசேட அக்கறையினைக் கொண்டுள்ள அபிவிருத்தியடைந்து வரும் ஜி 33 குழு நாடுகளில் ஒன்று என்ற வகையில், இலங்கையானது விவசாயத்தில் தன்னிறைவினை பாதுகாத்தல் மற்றும் விருத்தி செய்தல் கொள்கையின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றி வருகின்றது. “பாலி பொதி” ஆனது மானியங்கள் வழங்கக்கூடிய விவசாயத்துறை சார்ந்த சேவைகளின் விரிவாக்கம், உணவுப் பாதுகாப்பு நோக்கங்களுக்காக பொது இருப்பு பேணப்படுகின்ற விடயத்தில் வழங்கிய உதவுகைக்காக நெகிழ்வுப் போக்கினை அளித்தல் உள்ளடங்கலாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் உணவு பாதுகாப்புக்காக வழங்கப்பட்டுவரும் தீர்மானங்களையும் உள்ளடக்குகின்றது. ஏனைய தீர்மானங்கள் தரிவு வீத கோட்டா பங்கு நிருவாகம், ஏற்றுமதி போட்டி மற்றும் பருத்தி என்பனவற்றின் மீது கடைப்பிடிக்கப்படுகின்றது.

அபிவிருத்தி விடயத்தில், உறுப்பினர்கள் விசேட மற்றும் மாறுபட்ட ஏற்பாடுகளினை அமுலாக்குவதிலுள்ள அனைத்து விடயங்களையும் பகுப்பாய்வு மற்றும் மீளாய்வு செய்து உலக வர்த்தக நிறுவனத்திற்கு மிகவும் முக்கியமானதாகவிருக்கின்ற விசேடமானதும் மாறுபட்டதுமான கண்காணிப்பு முறைமையொன்றினை உறுப்பினர்கள் பின்பற்றி வருவதுடன் பிரச்சனைகளை இனங்காண்பதற்கான மீளாய்வாக இருக்குமிடத்து, முறைமையானது தொழில்நுட்ப விடயத்திற்குப் பொறுப்பான உலக வர்த்தக நிறுவனத்துடன் உரிய பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான பரிந்துரைகளை வழங்கலாம்.

மேலும், குறைவிருத்தி நாடுகளுக்கான மூலவிதிகளை எளிதாக்குதல், குறைவிருத்தி நாடுகளுக்கான சுங்கத் தீர்வையற்ற கோட்டா பங்கு அணுகுமுறை மற்றும் குறைவிருத்தி நாடுகளின் சேவை வழங்குனர்களுக்கான சேவை விடயத்தில் அதிக இணக்கப்பாடுகளை வழங்குவதற்கு ஏனைய உலக வர்த்தக நிறுவன உறுப்பினர்களுக்கு அநுமதியளித்தல் உள்ளடங்கலான குறைவிருத்தி நாடுகளின் நலன்கள் குறித்த விடயங்கள் தொடர்பிலும் தீர்மானங்கள் பின்பற்றப்பட்டன.

## 5.2 வர்த்தக முன்னுரிமைகளின் பூகோள முறைமை (GSTP)

வர்த்தக முன்னுரிமைகளின் பூகோள முறைமை தொடர்பான உடன்படிக்கையானது, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கிடையில் 1989 இல் தாபிக்கப்பட்டது. GSTP ஆனது தெற்கு – தெற்கு வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பினை அதிகரிக்கும் நோக்குடன் வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகள் மாநாட்டின் (UNCTAD) கீழ் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்ட தரிவு முன்னுரிமை முறைமையாகும். இத்திட்டத்தின் கீழ் இலங்கையானது, குறித்த ஆண்டு காலப்பகுதியில், 19.17 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியுடைய பொருட்கள் மெக்ஸிக்கோவுக்கும் பெருவுக்கும் செய்துள்ளது.

## 5.3. முன்னுரிமையின் பொதுவான முறைமை (GSP)

### (அ) EU GSP முறைமை

ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றமானது, 2012 ஜீன் 12 ஆம் திகதியன்று புதியதொரு ஜீஎஸ்பி முறைமையினை அங்கீகரித்துள்ளதுடன் அது **2014 ஜனவரி 1 ஆம்** திகதியிலிருந்து அமுலுக்கு வந்தது. இலங்கையானது, 2013 ஆம் ஆண்டில் பொதுவான EU GSP வரிச் சலுகைகளின் பயனாளியாக தொடர்ந்தும் இருந்து வந்துள்ளது. இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களில் அநேகமானவை, அத்தகைய உற்பத்திப் பொருட்களின் போட்டித் தன்மையினை அதிகரிக்கும் EU GSP வரிச் சலுகைகளுக்கான தகமையினைக் கொண்டுள்ளன.

### (ஆ) நோர்வே GSP+ திட்டம்

2013 ஜனவரியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் நோர்வே அரசாங்கமானது குறைந்த நடுத்தர வருமானத்தினையுடைய நாடுகளுக்கான வகையீடாக புதியதொரு GSP+ திட்டத்தினை அறிமுகப்ப்டுத்தியுள்ளது. இத்தகைய புதிய GSP+ வசதியானது, விரிவாக்கல் மற்றும் பல்வேறு வசதிப்படுத்தல்களுடன் குறைந்த நடுத்தர வருமானம் பெறும் நாடுகளின் தற்போதைய நிலையினை தரமுயர்த்தும் நோக்குடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையானது, அத்தகைய வசதியின் கீழ் பயனைப் பெறுகின்ற பதினேழு நாடுகளினுள் ஒன்றாக இருப்பதுடன் எச்எஸ் அத்தியாயம் 61, 62 மற்றும் 63 இன் கீழ் புடவைகள் மற்றும் தைத்த ஆடைகள் உள்ளடங்கலாக நோர்வேக்கு ஏற்றுமதி செய்யப்படும் அனைத்து வகையான கைத்தொழில் பொருட்களுக்குமான சுங்கத் தீர்வை விலக்களிப்புக்களையும் அநுபவித்து வருகின்றது.

### (இ) US GSP திட்டம்

US GSP நிகழ்ச்சித்திட்டமானது 2013 ஜீலை 31 ஆம் திகதியன்று காலாவதியாகியுள்ளதுடன் காங்கிரசானது மேற்படி திட்டத்தினை நீடிக்கவில்லை.The US GSP நிகழ்ச்சித்திட்டமானது 1974 இல் அது தோற்றம் பெற்றதிலிருந்து கடந்த காலங்களில் பன்னிரண்டு தடவைகள் காலாவதியாகியுள்ளது. எவ்வாறாயினும், ஐக்கிய அமெரிக்க ஏற்றுமதியாளர்கள், ஐக்கிய அமெரிக்காவின் காங்கிரஸ் GSP இனை ஒரு தடவை அங்கீகரித்துள்ளமையினை அடிப்படையாக கொண்டு பிற்பட்ட காலப்பகுதிகளின் மீதான மீள் நிதியிடலின் வழி மூலமாக GSP பயனைக் கோருவதற்கான தகைமையினைக் கொண்டுள்ளன.

## 6.0 பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு

இலங்கையானது அதன் பிராந்திய வர்த்தகம் மற்றும் APTA, SAPTA, SAFTA, BIMSTEC மற்றும் IORA எனும் பெயருடைய பொருளாதார ஏற்பாடுகளில் தொடர்ந்தும் பிரதான பாத்திரத்தினை வகித்து வருகின்றது.

### 6.1 ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA)

முன்னர் பாங்கொக் உடன்படிக்கை என அழைக்கப்பட்ட ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையானது (APTA) 2005 நவம்பர் 2 அம் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன் அது 2006 செப்ரெம்பர் 1 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்தது. APTA இன் நிலையியல் குழுவின் 41 மற்றும் 42 ஆம் அமர்வுகள் முறையே 2013 ஜூனிலும் 2013 நவம்பரிலும் நடாத்தப்பட்டன. மொங்கோலியாவுக்கும் APTA இல் பங்குபற்றும் ஏனைய அனைத்து நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டன. அதன்காரணமாக, மொங்கோலியாவானது, 2013 நவம்பரில் APTA இன் அமைச்சர்கள் மட்டத்திலான பேரவையின் 04 ஆவது அமர்வின் போது 04 ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தையினை நிறைவு செய்வதற்கு தீர்மானித்திருந்தன. புதிய இணக்கப்பாடுகளுடன் ஆழமான முன்னுரிமை எல்லைகளைப் போன்று நீண்ட வரிச் சலுகைப் பட்டியலினை உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன.

அத்துடன் APTA இன் கீழான இலங்கையின் ஏற்றுமதிகள், சீனாவுக்கான ஏற்றுமதிகள் அதிகரித்தமையின் காரணமாக 2013 இல் 75.1 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்துள்ளதுடன் இது 2012 உடன் ஒப்பிடுகையில் பாரிய வளர்ச்சியினைக்க ட்டுகின்றது. 2013 இல் APTA இன் கீழ் சீனாவுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் 53.9 மில்லியன் அமெரிக்க டொலரினைப் பதிவு செய்துள்ளதுடன் இது 2012 இல் 36.2 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்துள்ளது. மொத்த ஏற்றுமதிகளில் 42% இனைக் கொண்டுள்ள ஏற்றுமதிப் பொருட்களில் நார் மற்றும் தும்பு உற்பத்திகள் கணிசமானளவு பங்களிப்பினை வழங்கியுள்ளன. தேயிலை

(32%), தைத்த ஆடைகள் (17%), இறப்பர் மற்றும் இறப்பர் உற்பத்திகள் (3%) மற்றும் முனைப்பாக்கப்பட்ட காபன் (2%) என்பனவும் தமது பங்களிப்புக்களை வழங்கியுள்ளன. APTA இன் கீழான கொரியாவுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் 17.1 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்துள்ளன. 2012 இலிருந்து ஏற்றுமதிகளில் எத்தகைய மாற்றமும் ஏற்படாத போதிலும், சீனாவுடனான ஏற்றுமதிகளிலும் பார்க்க கொரியாவுக்கான ஏற்றுமதிகள் பல்வேறு வகைப்பட்டவையாக அமைந்திருந்ததுடன் ஏற்றுமதிகளில் இறப்பர் மற்றும் பெறுமதி சேர்த்த இறப்ப்ர் உற்பத்திகள் என்பன 36% இனையும் தைத்த ஆடைகள் 32% இனையும் தும்பு மற்றும் நார் உற்பத்திகள் 11% இனையும் முனைப்பாக்கப்பட்ட காபன் 10% இனையும் கொண்டுள்ளன. APTA இன் கீழ் இந்தியாவுக்கான ஏற்றுமதிகள் மொத்தமாக 5 மில்லியன் அமெரிக்க டொலரினைக் கொண்டுள்ளதுடன் இயற்கை இறப்பரானது 4.8 மில்லியன் அமெரிக்க டொலரினைப் பதிவு செய்துள்ளது.

## 6.2. தென்னாசிய முன்னுரிமை சார்ந்த வர்த்தக உடன்படிக்கை

தென்னாசிய முன்னுரிமை சார்ந்த வர்த்தக உடன்படிக்கையானது (SAPTA) 1993 ஏப்பிரல் 11 ஆம் திகதியன்று கைச்சாதிடப்பட்டு 1995 டிசம்பர் 7 ஆம் திகதியன்று அமுலுக்கு வந்தது. இந்த உடன்படிக்கையானது வரிச் சலுகைகளின் பரிமாற்றத்தினூடாக சார்க் பிராந்தியத்தில் பரஸ்பர வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பினை ஊக்குவித்து நிலையானதாக பேணுகின்ற உறுப்பு நாடுகளின் விருப்பங்களினை பிரதிபலித்துள்ளது.

SAPTA ஆனது சுங்க ஒன்றியத்தினைத் தொடர்ந்து முன்னணி வகிக்கின்ற தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசத்திற்கு (SAFTA) மாற்றம் பெறுவதற்கான முதல் கட்ட நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதனை காணமுடிகின்றது. எனவே, SAPTA ஆனது எதிர்காலத்தில், தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசத்தின் (SAFTA) மூலம் படிப்படியாக நீக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் SAPTA இன் கீழான வரி முன்னுரிமைப் பயன்பாடானது படிப்படியாக குறைவடைந்து வருகின்றது. 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில், இலங்கையானது SAPTA இன் கீழ் இந்தியா, நேபாளம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு ஏறக்குறைய 2.2 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது. SAPTA இன் கீழ் இந்நதியாவுக்கான ஏற்றுமதிகள் ஒட்டிக் கொள்ளக்கூடிய இறப்பர் சீற்கள், கெட்டியாக்கப்பட்ட இறப்பர் மற்றும் சிறியளவிலான லரெக்ஸ் பட்டிகளை உள்ளடக்கியிருந்தது. இந்த உடன்படிக்கையின் கீழ் பாகிஸ்தானுக்கான பிரதான ஏற்றுமதி பொருளாக தேங்காய் எண்ணெய் அமைந்திருந்தது. SAFTA இன் கீழ் ஏற்றுமதி செய்யப்படும் ஏனைய பொருட்களினுள் இயற்கை இறப்பர், கழிவு மற்றும் துண்டுக் கடதாசி என்பன உள்ளடங்கியிருந்தன.

## 6.3.தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசம்

தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேச பிரதேச உடன்படிக்கையானது (SAFTA) 2004 ஜனவரியில் 12 ஆவது சார்க் மாநாடு பாகிஸ்தான் இஸ்லாமபாத்தில் நடாத்தப்பட்ட போது கைச்சாத்திடப்பட்டு 2006 ஜனவரி 1 ஆம் திகதியன்று அமுலுக்கு வந்தது. SAFTA ஆனது, 1995 இல் தென்னாசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் (SAPTA) தாபித்தலுடன் ஆரம்பமாகிய முன்னுரிமை வர்த்தக ஊக்குவிப்பினூடாக பிராந்திய பொருளாதார நல்லிணக்க நிகழ்ச்சித்திட்டத்தினை விரிவாக்குவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

20% இனால் நெகிழ்வுப் பட்டியலினை குறைப்பது தொடர்பில் ஒவ்வொரு உறுப்பு நாட்டினாலும் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டு தீர்வு காணப்பட்டது. இலங்கையானது இந்த இணக்கப்பாட்டினை 2013 நவம்பர் 21 இலிருந்து அமுல்படுத்தி வருகின்றது.

இலங்கையானது 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் SAFTA இன் கீழ் இந்தியா, மாலைதீவு மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கு 1.74 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியுடைய பொருட்களை எற்றுமதி செய்துள்ளது. இந்தியாவுக்கான பிரதான ஏற்றுமதி பொருட்களாக ஹூக் அன்ட் லூப் பாஸரணர்ஸ், துணி வகைகள், இயற்கை தும்புகள் நார்கள், காரிய பெயர்த்தெடுப்புக்கள் மற்றும் உராய்வு நீக்கிகள் என்பன காணப்படுகின்றன. மேசைகள், கதிரைகள் போன்ற தளபாடங்கள் இந்த உடன்படிக்கையின் கீழ் மாலைதீவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. SAFTA உடன்படிக்கையின் கீழ் சிறியளவிலான சைக்கிள் ரயர்கள், முலாமிடப்பட்ட கல்சியம் கார்பனைற்று என்பன நேபாளத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

பின்வரும் கூட்டங்கள் 2013 ஜனவரியிலிருந்து செப்ரெம்பர் வரையில் நடாத்தப்பட்டன.

1. 2013 ஜீலை 30 ஆம் திகதி, சார்க் செயலகம் காத்மண்டுவில் நடாத்தப்பட்ட சப்ரா இன் கீழான நெகிழ்வுப் பட்டியல்ளைக் குறைப்பது தொடர்பான தொழிற்படு குழுவின் இரண்டாவது கூட்டம் (கட்டம் III)
2. 2013 ஜீலை 31 இலிருந்து ஆகஸ்ட் 1 ம் திகதி வரையில் சார்க் செயலகம், காத்மண்டுவில் நடாத்தப்பட்ட வரியல்லா அளவீடுகள் மற்றும் துணை வரி அளவீடுகள் மீதான சப்ரா நிபுணர் குழுவின் விசேட கூட்டங்கள்
3. 2013 ஆகஸ்ட் 21 – 22 ஆம் திகதி வரையில் கொழும்பில் நடைபெற்ற சப்ரா நிபுணர் குழுவின் எட்டாவது கூட்டம்
4. 2013 ஆகஸ்ட் 23 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற சப்ரா அமைச்சர்கள் மட்டத்திலான பேரவையின் ஏழாவது கூட்டம்.

மேற்படிக் கூட்டங்களில் பின்வரும் விடயங்கள் ஆராயப்பட்டன.

- சப்ராவின் கீழ் கைச்சாத்திட்ட மீளாய்வு செய்யப்பட்ட நெகிழ்வுப் பட்டியல்கள் வழங்குகையின் அமுலாகத்திலுள்ள முன்னேற்றம் (கட்டம் II)

- சப்ராவின் கீழான நெகிழ்வுப் பட்டியல்களில் மேலும் குறைப்புக்காக கடைப்பிடிக்கப்படவேண்டிய வரையறைகள் மற்றும் கால எல்லைகள் (கட்டம் III)
- அங்கத்துவ நாடுகளிலிருந்து பெறப்பட்ட வரியல்லா நடைமுறைகள்/ துணை வரி நடைமுறைகள் ஆகியவற்றின் மீதான அறிவத்தல்களின் சோதனை மற்றும் வரியல்லா நடைமுறைகள்/ துணை வரி நடைமுறைகளுடன் தொடர்புடைய விடயங்கள்
- சப்ராவின் கீழ் மற்றும் சப்ராவுக்கு வெளியேயான சார்க் வர்த்தக பாய்ச்சல்களுக்கிடையில் தொடர்புடைய விடயங்கள்.
- EU GSP இன் கீழான சுப்பர் பிராந்திய ஒன்றிணைப்பு தொடர்பான விடயங்கள், SAPTA மற்றும் SAFTA இன் கீழான உறுதிப்படுத்தல் பொறிமுறையின் நிறுவனமயமாக்கல் மற்றும் சப்ரா முறைமையின் பிணக்குத் தீர்வு மற்றும் வர்த்தக வசதிப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்
- சப்ரா உடன்படிக்கையின் நிருவாக மற்றும் அமுலாக்கலுடன் தொடர்புடைய விடயங்கள்

## 6.4 வர்த்தக சேவைகள் மீதான சார்க் உடன்படிக்கை

பூட்டானில், 2010 ஏப்பிரலில் இறுதியாக நடாத்தப்பட்ட 16 ஆவது சார்க் மாநாட்டின் போது அங்கத்துவ நாடுகள் வர்த்தக சேவைகள் மீதான சார்க் சட்ட ரீதியான உடன்படிக்கையில் (SATIS) கைச்சாத்திட்டன. அனைத்து நாடுகளும் இந்த உடன்படிக்கையினை ஏற்றுக் கொண்டுள்ளதுடன் SATIS இன் கீழான தேசிய இணக்கப்பாடுகளின் அட்டவணையினை நிறைவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இந்தியாவும் பூட்டானும் தமது இணக்கப்பாடு அட்டவணைகளை ஏற்கனவே சமர்ப்பித்துள்ளன. இலங்கையானது அதன் இறுதிக் கட்ட நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.

## 6.5 இந்து சமுத்திர கரையோர கூட்டமைப்பு

இந்து சமுத்திர கரையோர கூட்டமைப்பானது (IORA), அரசாங்கம், வியாபாரம் மற்றும் கல்விசார்ந்த குழு என முப்பிரிவுகளைக் கொண்டதும் அவற்றிற்கிடையேஒத்துழைப்ப்னையும் நெருங்கிய தொடர்பினையும் பேணி வருகின்ற இந்து சமுத்திர கரையோர நாடுகளுக்கிடையலான பிராந்திய கூட்டமைப்பாகும். 1535.22 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான IORA நாடுகளுக்கான மொத்த ஏற்றுமதியானது, உலகுக்கான இலங்கையின் மொத்த ஏற்றிமதிகளில் 15% ஆகும். 2013 இல் IORA நாடுகளிலிருந்தான மொத்த இறக்குமதிகள் 8044.54 மில்ல்யன் அமெரிக்க டொலராக இருந்துள்ளதுடன் இது உலகிலிருந்தான இலங்கையின் மொத்த இறக்குமதிகளில் 47% ஆகும். இது IORA பிராந்தியத்தில் 6509.32 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான எதிர்மறை வர்த்தக மீதியினை பதிவு செய்கின்றது.9579.76 மில்லியன் அமெரிக்க டொலராக

இருக்கின்ற IORA நாடுகளுடனான இலங்கையின் மொத்த வர்த்தகமானது உலக நாடுகளுடனான மொத்த வர்த்தகத்தில் 35% ஆகும்.

கௌரவ கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிசாட் பதியுதீன் அவர்கள் மொரிஷியஸில் 2013 ஜூலை 4 – 5 வரையில் நடாத்தப்பட்ட முதலாவது IORA அமைச்சர்கள் மட்டத்திலான பொருளாதார மற்றும் வியாபார மாநாட்டில் (EBC) வர்த்தக திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் இலங்கையின் ஐந்து முன்னணி கம்பனிகளின் பிரதிநிதிகளுடன் கலந்து கொண்டார். இது 2012 இல் நடாத்தப்பட்ட 18 ஆவது IORA வர்த்தக கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக இடம்பெற்றது. இந்த மாநாட்டின் நோக்கமானது, உறுப்பு நாடுகளில் அரசாங்க துறை மற்றும் தனியார் துறை தலைவர்களுக்கிடையேயான கொள்கை திட்டமிடல்களை வகுப்பதன் மூலம் வர்த்தக உறவுகளை வலுப்படுத்துதேயாகும். அத்துடன் B2B மேடைகளினூடாக தனியார் துறைகளுக்கிடையில் தலையீடு செய்வதனூடாக வர்த்தக ஒத்துழைப்பினை விரிவாக்குதலாகும்.

IORA இன் 13 ஆவது அமைச்சர்களின் பேரவை கூட்டமானது அவுஸ்திரேலியா, பேர்தில் 2013 ஒக்டோபர் 30 இலிருந்து நவம்பர் 1 வரையில் நடாத்தப்பட்டது. இலங்கையானது இக்கூட்டத்தில் IORA உறுப்பு நாடுகளுக்கிடையிலான முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையில் பங்குபற்றும் அதன் அக்கறை குறித்து வெளிப்படுத்தியுள்ளது.

WGTI இன் போது பல உறுப்பு நாடுகள் தமது புதிய கருத்திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளதுடன் கருத்திட்டங்களின் புதுப்பிப்புக்கள் ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையானது IORA உறுப்பு நாடுகளுக்கிடையில் வியாபார பயண அட்டையினை அறிமுகப்படுத்தும் எண்ணக்கருவுக்கு அதன் ஆதரவினைத் தெரிவித்துள்ளது. இலங்கையானது “IORA உறுப்பு நாடுகளில் பிராந்தியங்களுக்கிடையில் வர்த்தகம் மற்றும் முதலிட்டினை ஊக்குவிப்பதற்கான நிறுவன ரீதியான முறைமைகள் தொடர்பான ஆய்வு” குறித்தும் கருத்தினை வெளிப்படுத்தியுள்ளதுடன் IORA விசேட நிதியத்தினூடாக நிதியிடப்படும் இந்து சமுத்திர அவதானிப்பு மற்றும் எதிர்வு கூறலுக்கான நிலையமொன்றினை தாபிக்கும் உத்தேச கருத்திட்டம் குறித்தும் கோரிக்கை விடுத்திருந்தது.

இலங்கையானது, இலங்கையில் 2014 மே இல் நடாத்தப்படும் IORA உறுப்பு நாடுகளுக்கான “மரபுரிமை முகாமைத்துவம் மீதான செயலமர்வு” பற்றியும் அறிவித்துள்ளது. இலங்கையானது கூட்டங்களில் உறுப்பு நாடுகளின் பல்வேறு கருத்திட்டங்கள் தொடர்பில் தனது அக்கறையினையும் ஆதரவினையும் தெரிவித்துள்ளது.

# 7.0 வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு

## 7.1 வர்த்தக ஊக்குவிப்பு

திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடுகளில் சர்வதேச வர்த்தக ஊக்குவிப்பும் ஒன்றாகும். வர்த்தக ஊக்குவிப்பின் கீழ் பொறுப்பேற்கப்படுகின்ற நடவடிக்கைகள், ஏற்றுமதிகளுக்கான சந்தை நுண்ணாய்வினை வழங்குதல், சந்தை தடைகளுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துதல், சந்தைத் தேவைகளுக்குரிய பொருட்கள் தொடர்பில் ஏற்றுமதியாளர்களுக்கு அறவூட்டுதல், கொள்வனவாளர்களை அறிமுகப்படுத்துதல், வர்த்தக சந்தை பங்குபற்றுதலுக்கு வசதியளித்தல் மற்றும் இலங்கையிலும் வெளிநாடுகளிலுமுள்ள வர்த்தக மன்றங்களுடன் நெருங்கிய தொடர்பினைப் பேணுதல் என்பவற்றுடன் தொடர்புபடுகின்றன. வர்த்தக திணைக்களமானது வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களில் பணியாற்றுகின்ற வர்த்தக உத்தியோகத்தர்களின் உதவுகையுடன் இலங்கையிலுள்ள ஏனைய வியாபார ஆதரவு நிறுவனங்களுடனும் "மஹிந்த சிந்தனை" எண்ணக்கருவினை முன்னெடுத்துச் செல்லும் நோக்குடன் "அரச – தனியார் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின்" கீழ் அறிமுகப்படுத்தவதற்கா நடவடிக்கையினை எடுத்துள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் வெளிநாடுகளிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்களினால் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

வெளிநாடுகளிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்களினால் நிறைவேற்றப்பட்ட பிரதான தொழிற்பாடுகள் பின்வருவனவற்றினை உள்ளடக்குகின்றன.

- இலங்கை உற்பத்திகளுக்கான ஏற்றுமதி வாய்ப்புக்களை இனங்காண்பதற்கான சந்தை மதிப்பாய்வுகள்/நுண்ணய்வுகளை நடாத்துதல்
- உதவி வழங்கும் நாட்டின் வர்த்தக கொள்கை மாற்றங்கள் விசேடமாக வரி மற்றும் வரியல்லா நடவடிக்கைகள் தொடர்பில் கண்காணித்தலும் அறிக்கையிடலும்.
- முக்கியத்துவம் வாய்ந்த சர்வதேச வர்த்தக கண்காட்சிகள்/நிகழ்வுகளில் இலங்கையின் பங்குபற்றுதலினை ஏற்பாடு செய்தல். இப்பணியானது இலங்கையின் ஏற்றுமதிகளை மேம்படுத்துவதில் அதிக பயனுறுதி வாய்ந்த நடவடிக்கைகளில் ஒன்றாக கருதப்படுகின்றது.
- இலங்கையில் நடைபெறும் கண்காட்சிகள்/நிகழ்வுகளில் வெளிநாட்டு வியாபார தூதுக்குழுக்களை பங்குபற்றுவதற்கு ஏற்பாடு செய்தல்
- அனுசரணை வழங்கும் நாடுகளில் இலங்கை தொடர்பான விசேட ஊக்குவிப்பு பிரச்சாரங்களை அரங்கேற்றுதல்.
- வர்த்தக, முதலீடு மற்றும் சுற்றுலா தூதுக்குழுக்கள் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கான எற்பாடுகளையும் வியாபார வாய்ப்புக்களை கண்டறிவதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுதல்.
- வியாபார வாய்ப்புக்களை கண்டறிவதற்கு இலங்கையிலிருந்தும் இலங்கைக்குமான தனிநபர் வியாபார விஜயங்களை ஏற்பாடு செய்தல்

- அநுசரணை நாடுகளிலுள்ள வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா துறை ஆகியவற்றுடன் தொடர்புடைய அதிகாரிகளுடன் வலையமைப்பினை ஏற்படுத்துதல் மற்றும் இலங்கையின் வர்த்தக மற்றும் பொருளாதார நலன்களுடன் தொடர்புடைய பிரச்சனைகள் மற்றும் விடயங்கள் தொடர்பில் பல்வேறுபட்ட அரசாங்க மற்றும் சர்வதேச நிறுவனங்களினை பிரதிநிதித்துவப்படுத்துதல்.
- இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய விசாரணைகளை வழங்குதல், வெளிநாட்டு வியாபாரம் தொடர்பான விஜயங்கள்/கூட்டங்களை நடாத்துதல், தொழில்நுட்ப உதவுகையினை வழங்குதல், வர்த்தகம் தொடர்பான பிணக்குகளை தீர்த்தல் போன்றன.

2010 ஜனவரியிவிருந்து 2013 டிசம்பர் வரையிலான காலப்பகுதியில் வர்த்தக உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

(அட்டவணை 02)

| நடவடிக்கைகள் | 2010 | | 2011 | | 2012 | | 2013 | | மொத்தம் (2010-2013) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கண்காட்சிகள் /தூதுக் குழுக்களின் எண்ணிக்கை | பங்குபற்றுனர்கள்/தூதுக்குழுக்களின் எண்ணிக்கை | கண்காட்சிகள் /தூதுக் குழுக்களின் எண்ணிக்கை | பங்குபற்றுனர்கள்/தூதுக்குழுக்களின் எண்ணிக்கை | கண்காட்சிகள் /தூதுக் குழுக்களின் எண்ணிக்கை | பங்குபற்றுனர்கள்/தூதுக்குழுக்களின் எண்ணிக்கை | கண்காட்சிகள் /தூதுக் குழுக்களின் எண்ணிக்கை | பங்குபற்றுனர்கள்/தூதுக்குழுக்களின் எண்ணிக்கை | கண்காட்சிகள் /தூதுக் குழுக்களின் எண்ணிக்கை | பங்குபற்றுனர்கள்/தூதுக்குழுக்களின் எண்ணிக்கை |
| அனுசரணை வழங்கும் நாட்டில் இலங்கையிலிருந்தான ஊக்குவிப்பு சந்தை பங்குபற்றல் | 52 | 510 | 59 | 671 | 80 | 728 | 75 | 848 | 266 | 2757 |
| அனுசரணை வழங்கும் நாட்டிலிருந்து இலங்கையில் ஊக்குவிப்பு சந்தை பங்குபற்றல் | 12 | 47 | 26 | 90 | 29 | 122 | 37 | 325 | 104 | 584 |
| இலங்கை எக்ஸ்போ 2012, | பொருத்தமற்றது | பொருத்தமற்றது | பொருத்தமற்றது | பொருத்தமற்றது | 1 | 1160 | பொருத்தமற்றது | பொருத்தமற்றது | 1 | 1160 |
| அனுசரணை வழங்கும் நாடுகளில் இலங்கை குறித்த ஊக்குவிப்பு பிரச்சாரங்கள் (தனியொரு நாடு) | 88 | பொருத்தமற்றது | 116 | பொருத்தமற்றது | 138 | பொருத்தமற்றது | 127 | பொருத்தமற்றது | 469 | பொருத்தமற்றது |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலங்கைகான தூதுக்குழுக்கள்(எக்ஸ்போ – 2012 தவிர்ந்த) | 49 | 385 | 43 | 282 | 48 | 457 | 98 | 563 | 238 | 1687 |
| அனுசரணை வழங்கும் நாட்டுக்கான தூதுக்குழுக்கள் | 41 | 437 | 61 | 436 | 54 | 455 | 70 | 600 | 226 | 1928 |
| அனுசரணை வழங்கும் நாட்டுக்கான தனிநபர் விஜயம் | பொருத் தமற்றது | 147 | பொருத் தமற்றது | 174 | பொருத் தமற்றது | 181 | பொருத் தமற்றது | 201 | பொருத் தமற்றது | 703 |
| இலங்கைக்கான தனிநபர் விஜயங்கள் | பொருத் தமற்றது | 147 | பொருத் தமற்றது | 139 | பொருத் தமற்றது | 194 | பொருத் தமற்றது | 270 | பொருத் தமற்றது | 750 |
| விடையளிக்கப்பட்ட இரு வழி வர்த்தக விசாரணைகள் | 1728 | | 1751 | | 1882 | | 2133 | | 7494 | |

## 7.2 கொழும்பில் 2013 நவம்பர் 13 – 17 ஆம் திகதி வரையில் வர்த்தக, சுற்றுலா மற்றும் முதலீடு தொடர்பான “இலங்கையின் பிரதிபலிப்பு” எனும் தலைப்பிலான சர்வதேச கண்காட்சி

தூதரகங்களின் வர்த்தக பிரிவுகள், அவை அமைந்துள்ள உரிய நாடுகளில் “இலங்கையின் பிரதிபலிப்பு” எனும் தலைப்பிலான கண்காட்சியனைப் பிரபல்யப்படுத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அதிகபட்சம் மேற்கொண்டிருந்தன. அதன்விளைவாக, பல வெளிநாட்டு பொருட்காட்சியாளர்கள் மற்றும் ஊடகத்துறையினர் மற்றும் நூற்றுக்கணக்கான வெளிநாட்டு கொள்வனவாளர்கள் எனப் பல்வேறு தரப்புக்களும் ஏற்பாட்டாளர்களுடன் இணைந்து இக் கண்காட்சியில் பங்குபற்றியிருந்தார்கள்.

## 7.3 தேசத்திற்கு மகுடம் – 2013, தேசிய அபிவிருத்தி கண்காட்சியில் வர்த்தக திணைக்களத்தின் தகவல் நிலையம்

வர்த்தக திணைக்களமானது, அம்பாறையில் நடாத்தப்பட்ட “தேசத்திற்கு மகுடம் – 2013” எனும் தேசிய அபிவிருத்தி கண்காட்சியில் பங்குபற்றியிருந்ததுடன் வர்த்தகம் திணைக்களம் தொடர்பான தகவல்களைக் கொண்ட கை நூலொன்று வர்த்தக திணைக்களத்தின் தகவல் நிலையத்தில் வைத்து பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் வர்த்தக திணைக்களத்தினால் அளிக்கப்பட்டு வரும் சேவைகளினைப் பெறுபவர்கள் மற்றும் ஏற்றுமதி நடவடிக்கையில் ஈடுபடுகின்றவர்களுக்கு அறிவூட்டும் நோக்குடன் விநியோகிக்கப்பட்டதுடன் வெளிநாடுகளிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்களுடன் ஆர்வமுடைய தொழில் அதிபர்கள், வியாபார தகவல்களைப் பெறும் நோக்குடன் வீடியோ மாநாடு வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

## 7.4 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

### (அ) ஐக்கிய அமெரிக்க உணவு மற்றும் ஔடத கட்டுப்பாட்டின் புதிய உணவு பாதுகாப்பு நவீனமயப்படுத்தல் சட்டம் மற்றும் எப்டிஏ இன் சோதனை செயல்முறை – 2013 ஆகஸ்ட் 24 ஆம் திகதி

வர்த்தக திணைக்களமானது, வொஸிங்டனிலுள்ள இலங்கை தூதரகத்துடன் இணைந்து 55 பங்குபற்றுனர்களுடனான கருத்தரங்கொன்றினை எப்டிஏ மற்றும் ஐக்கிய அமெரிக்க உணவு கைத்தொழிலிருந்தான தனியார் துறையுடன் இணைந்து இலங்கையின் தற்போதைய உணவு பாதுகாப்பினை உள்ளார்ந்த முறையிலானதாக மாற்றியமைக்கும் நோக்குடன் ஏற்பாடு செய்திருந்தது. கருத்தரங்கின் நோக்கமானது அமெரிக்காவினது உணவு பாதுகாப்பு சட்டம் தொடர்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதுடன் எப்டிஏ இன் சோதனை செயல்முறையானது ஆண்டின் இறுதிப்பகுதியிலும் மேற்கொள்ளப்பட்டு வந்திருந்தது.

### (ஆ) 2013 ஆகஸ்ட் 8 ஆம் திகதிய நோர்வே மீதான GSP திட்டம் மீதான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

50 பங்குபற்றுனர்களின் பங்குபற்றுதலுடன் புதிய நோர்வே ஜிஎஸ்பி + திட்டத்தின் கீழ் நோர்வேக்கான ஏற்றுமதிகளை விரிவுபடுத்துவதற்கான உள்ளார்ந்த விழிப்புணர்வு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்று இலங்கை வர்த்தக மன்றத்தின் ஆதரவுடன் வர்த்தக திணைக்களம் எற்பாடு செய்திருந்தது.

## 7.5 சுற்றுலா ஊக்குவிப்பு

நாட்டில் தீவிரவாதம் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர், உடனடியாக கவனம் செலுத்தப்பட்ட துறைகளில் சுற்றுலாத்துறையும் ஒன்றாகும். சுற்றுலாத்துறையில் மறைந்துள்ளவற்றினை வெளிக்கொணர்ந்து அவற்றிற்கு அங்கீகாரம் வழங்கும் நோக்குடன் வர்த்தக உத்தியோகத்தர்களினால் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் ஆதரவுடன் வெளிநாடுகளில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இலங்கை விமான சேவையானது கண்கவர் சுற்றுலா இடமாக இலங்கையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. சுற்றுலா இடமாக இலங்கையை ஊக்குவிப்பதற்கு வர்த்தக உத்தயோகத்தர்களினால் பின்பற்றப்படும் பிரதான தந்திரோபாயங்கள், விசேட கருத்தரங்குகள், மற்றும் மாநாடுகளை ஏற்பாடு செய்தல், சுற்றுலா குழுக்கள் விஜயம்செய்தல், சர்வதேச சுற்றுலா சந்தைகளில் பங்குபற்றுதல், இலங்கைக்கான ஊடக தூதுக்குழுக்களை ஏற்பாடு செய்தல், சுற்றுலா ஊக்குவிப்பு பேரவைகள், அநுசணை வழங்கும் நாட்டிலுள்ள இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களினூடாக பிரபல்யப்படுத்துதல் போன்றவை உள்ளடங்குகின்றன.

## 7.6 வெளிநாட்டு நேரடி முதலீட்டு ஊக்குவிப்பு (FDI)

வெளிநாட்டிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்கள் நாட்டிற்குள் வெளிநாட்டு நேரடி முதலீட்டினக்கொண்டு வருவதில் பெரும் பங்கினை ஆற்றியுள்ளனர். மீளாய்வு காலப்பகுதியில், வர்த்தக உத்தியோகத்தர்கள் 100 இற்கும் அதிகமான வெளிநாட்டு கம்பனிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தியள்ளதுடன் திறமை வாய்ந்த முதலீட்டாளர்களாக இனங் காணப்பட்டவர்களுக்கு நாட்டில் கிடைக்கக் கூடிய முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டுள்ளன. இவர்களில் சிலர் ஏற்கனவே தொழிற்சாலைகளை அமைப்பதற்காக இலங்கைக்கு வருகை தந்துள்ளார்கள்.

## 7.7 வதிவிட விசாவுக்கான பரிந்துரை

வர்த்தக திணைக்கமானது, இலங்கையிலுள்ள வெளிநாட்டு தொழில் அதிபர்கள், தொழில் முயற்சியாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், உசாவுலர்கள் மற்றும் ஆராய்ச்சி உத்தயோகத்தர்கள் ஆகியோருக்கான வதிவிட விசாக்களுக்கான பரிந்துரைகளை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளருக்கு வழங்குவதில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளருக்கு உதவியளிக்கின்றது. இப்பணியினை நிறைவேற்றுவதற்காக திணைக்களமானது உண்மையாக பரிந்துரை செய்யப்பட்ட விசாக்களை உறுதிப்படுத்துவதில் கூடிய கவனம் செலுத்துவதுடன் தேசிய அபிவிருத்தி அவ்வாறே மனிதவள அபிவிருத்தி நோக்கிலான ஆதரவினையும் வழங்குகின்றது.

குறித்த ஆண்டு காலப்பகுதியில் வர்த்தக திணைக்களமானது, 70 இந்திய, 50 பிரித்தானிய, 17 பாகிஸ்தானிய, 27 யப்பானிய மற்றும் ஒஸ்ரியன், அவுஸ்திரேலிய, சீன, பிரெஞ்சு, ஜேர்மனிய, ஐரிஷ், சிங்கப்பூர், மற்றும் சுவீடிஷ் உள்ளடங்கலான பல்வேறு நாடுகளிலிருந்தான 115 விண்ணப்பதாரிகள் மற்றும் 91 தங்கியிருப்போர் உள்ளடங்கலான 206 குடிபெயர்ந்தவர்களுக்கான வதிவிட விசா பரிந்துரைகளை வழங்கியுள்ளது.

## 7.8 1949 ஆம் ஆண்டின் 06 ஆம் இல. குத்கை சட்டத்தின் கீழ் கடன் முகவராண்மைகளின் அங்கீகாரம்

1949 ஆம் ஆண்டின் 6 ஆம் இல. குத்தகை சட்டத்தின் கீழ், ஏதேனும் கம்பனி, நிறுவனம் அல்லது தனிநபரினை அங்கீகரிக்கப்பட்ட கடன் முகவராண்மையாக பிரகடனப்படுத்துவதற்கான அதிகாரமானது வர்த்தகப் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் நாயகமானவர்1949 ஆம் ஆண்டின் 6 ஆம் இல. குத்தகை சட்டத்தின் 114(1) ஆம் பிரிவின் கீழ் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்பட்ட தலைவர் மற்றும் இரண்டு ஏனைய உறுப்பினர்களைக் கொண்ட சபையின் பரிந்துரைகளின் அடிப்படையில் அவ்வாறு மேற்கொள்வதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றார்.

## 8.0 உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களினை வழங்குதல்

வர்த்தக திணைக்களமானது பின்வரும் முன்னுரிமை மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கான உற்பத்தி நாட்டு சான்றிதழ்களை வழங்குகின்றது.

- முன்னுரிமையின் பொதுவான முறைமை (GSP)
- வர்த்தக முன்னுரிமையின் பூகோள முறைமை (GSTP)
- சார்க் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை (SAPTA)
- தென்னாசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SAFTA)
- இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ((ISFTA)
- பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ((PSFTA)
- ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA)

2013 டிசம்பரிலுள்ளவாறு, வர்த்தகதிணைக்களமானது உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களினை வழங்குவதற்காக 4,186 ஏற்றுமதியாளர்களைப் பதிவு செய்துள்ளது. வேலை நாளொன்றில் சராசரியாக வர்த்தக திணைக்களத்தினால் 470 உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்கள் செயல்முறைப்படுத்தப்பட்டு வழங்கப்படுகின்றன. அட்டவணை 03 ஆனது 2010 – 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வர்த்தக திணைக்ள்ளத்தினால் உரிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் வழங்கப்பட்ட உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் எண்ணிக்கையினைக் குறிப்பிடுகின்றது. உயர்தரத்தில் பயிற்சியளிக்கப்பட்ட உத்தியோகத்தரக்ளினைக் கொண்ட குழுவொன்றுஉற்பத்தி நாட்டுச்சான்றிதழ் வழங்கும் பிரிவில் முழுநேரமும் நியமிக்கப்பட்டுள்ளதுடன் முன் அனுமதியின்றி அலுவலக நேரங்களில் உசாவுதல்களும் மேலதிக விளக்கங்களும் அளிக்கப்பட்டு வருகின்றன. உயர் பதவியினை வகிக்கும் உத்தியோகத்தர்களினால் தினசரி சராசரியாக 30 முதல் 50 வரையிலான உசாவுதவல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் வழங்குகையானது வேறுபட்ட உடன்படிக்கைகள்/ஏற்பாடுகளின் கீழான உரிய மூல விதிகளின் வகையீடுகளில் ஆழமான அறிவுடன் விசேடமாக வடிவமைக்கப்பட்டு உயர்தரத்தில் வழங்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் வர்த்தக திணைக்களத்தின் பொறுப்புக்களாக; *(அ)* வரிச்சலுகைகளுக்கான பொருட்களின் தகமையினை மதிப்பீடு செயதல் *(ஆ)* ஏற்றுமதியாளர்களின் விபரங்களைப் பதிவு செய்தலும் பேணுதலும், *(இ)* தமது தகமையினை நிரூபிப்பதற்காக ஏற்றுமதியாளர்களினால் சமர்ப்பிக்கப்படும் செலவுக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய இணை ஆவணங்களை மதிப்பீடு செய்தல், *(ஈ)* முன்னுரிமை வழங்கும் நாடுகளின் கோரிக்கையின் பேரில் உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் வழங்குகையின் பின்னரான கணக்காய்வினை நடாத்துதல் மற்றும்

*(உ)* உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களுடன் தொடர்புடைய தரவுகள் மற்றும் பகுப்பாய்வு அறிக்கைகளினை தொகுத்தலும், போன்றவை உள்ளடங்குகின்றன.

## வர்த்தக திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள உற்பத்தி நாட்டு சான்றிதழ்கள்

## (அட்டவணை 03)

| உடன்படிக்கை | வழங்கப்பட்டுள்ள உற்பத்தி நாட்டு சான்றிதழ்களின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|
| | **2010** | **2011** | **2012** | **2013** |
| EU GSP | 88,409 | 85,600 | 114,029 | 79,774 |
| GSP- ஏனைய நாடுகள் | 15,434 | 14,782 | 13,909 | 13,410 |
| GSP-CIS நாடுகள் | 871 | 856 | 1,009 | 929 |
| ISFTA | 10,373 | 35 | 9,742 | 11,088 |
| PSFTA | 5,219 | 30 | 8,057 | 8,190 |
| APTA | 1,906 | 2,424 | 2,781 | 3,482 |
| SAFTA | - | - | 26 | 74 |
| SAPTA | 239 | 248 | 253 | 243 |
| GSTP | 99 | 115 | 136 | 147 |
| **மொத்தம்** | **122,550** | **104,090** | **149,942** | **117,337** |

# பதவியினர் இடநகர்வுகள் – 2013

| உத்தியோகத்தரின் பெயர் | இடநகர்வு | திகதி |
|---|---|---|
| **பதவி உயர்வுகள்** | | |
| திரு.ஆர்டீ.எஸ்.கருணாரத்ன<br>வர்த்தக பணிப்பாளர் நாயகம் | வர்த்தக பணிப்பாளர் நாயகமாக பதவியேற்றார் | 2013.10.03 |
| இளைப்பாறல்கள் | | |
| திரு.பீ.டி.பெர்ணாண்டோ<br>வர்த்தக பணிப்பாளர் நாயகம் | வர்த்தக பணிப்பாளர் நாயகம் பதவியிலிருந்து இளைப்பாறியுள்ளார் | 2013.09.21 |
| புதிய ஆட்சேர்ப்புக்கள் | | |
| திருமதி.வீ.எஸ்.பண்டார | உதவி வர்த்தக பணிப்பாளராக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார். | 2013.02.06 |
| செல்வி.பீ.கே.எஸ்.ஜயரத்ன | உதவி வர்த்தக பணிப்பாளராக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார். | 2013.02.06 |
| செல்வி.டப்.ஜீ.வை.என்.குணவர்தன | உதவி வர்த்தக பணிப்பாளராக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார். | 2013.02.06 |
| செல்வி.டீ.எம்.எஸ்.என் அபேரத்ன | உதவி வர்த்தக பணிப்பாளராக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார். | 2013.02.06 |
| செல்வி.டப்.சீ.கே.பெரேரா | உதவி வர்த்தக பணிப்பாளராக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார். | 2013.02.06 |
| செல்வி.எம்.டப்.பீ.அபேகோன் | உதவி வர்த்தக பணிப்பாளராக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார். | 2013.02.06 |
| செல்வி.டப்.ரீசி.போதேஜு | உதவி வர்த்தக பணிப்பாளராக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார். | 2013.02.06 |
| திரு.எஸ்ஏ.எஸ்.ஏ.சமரவீர | உதவி வர்த்தக பணிப்பாளராக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார். | 2013.02.06 |
| திரு.எம்.ஜி.கே.ஜீ.குமார | உதவி வர்த்தக பணிப்பாளராக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார். | 2013.02.06 |
| திரு.ஆர.பீ.ஜீ.ஆர்.ராஜபக்ஸ | உதவி வர்த்தக பணிப்பாளராக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார். | 2013.02.06 |
| **இடமாற்றல் நியமனங்கள்** | | |
| திரு.ஏ.ஜீ.என்.ஏ.கருணாதிலக,<br>வர்த்தக பணிப்பாளர் | உலக வர்த்தக நிறுவனம் மற்றும் சுவிற்சலாந்து, ஜெனிவாவிலுள்ள இலங்கை தூதரகத்தின் நிரந்தர பிரதிநிதியாக நியமனம். | 2013.01.01 |
| திருமதி.டீ.ஏ.எஸ்.விஜேவந்தா<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | ஐக்கிய இராச்சிய இலண்டனிலுள்ள உயர் ஸ்தானிகராலயத்திற்கு | 2013.01.01 |

| | | |
|---|---|---|
| | நியமிக்கப்பட்டுள்ளார் | |
| திருடீ.எம்.ரத்நாயக்க<br>பிரதி வர்த்தக பணிப்பாளர் | அவுஸ்திரேலியா, சிட்னியிலுள்ள இலங்கை கொன்சுலேற் ஜெனரல் அலுவலகத்திற்கு நியமனம் | 2013.03.19 |
| திரு.டீ.எம்.என்.பீ.விஜரத்ன<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | உலக வர்த்தக நிறுவனம் மற்றும் சுவிற்சலாந்து, ஜெனிவாவிலுள்ள இலங்கை தூதரகத்தின் நிரந்தர பிரதிநிதியாக நியமனம். | 2013.09.09 |
| திரு.எச்.எம்.பி.ஹேரத்<br>பிரதி வர்த்தக பணிப்பாளர் | பாகிஸ்தான், கராச்சியிலுள்ள இலங்கை கொன்சுலேற் ஜெனரல் அலுவலகத்திற்கு நியமனம் | 2013.09.14 |
| திரு.பீ.எம்.எஸ்.ஏபி. கொடவிற்ற<br>வர்த்தக பணிப்பாளர் | கனடா, ரொறொன்ரோவிலுள்ள இலங்கை கொன்சுலேற் ஜெனரல் அலுவலகத்திற்கு நியமனம் | 2013.09.16 |
| திரி.வை.வை.கே.டீ சில்வா<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | தென் கொரியா, சியோலிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார். | 2013.10.25 |
| திரு.டீ.டீ.பிரேமரத்ன<br>பிரதி வர்த்தக பணிப்பாளர் | ஜப்பான், ரோக்கியோவிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார் | 2013.12.21 |
| **இட மாற்றல்கள் – திணைக்களத்திற்கு திரும்ப அழைக்கப்பட்டவர்கள்** | | |
| திரு.டீ.டப்.ஜினதாச<br>பிரதி வர்த்தக பணிப்பாளர் | பாகிஸ்தான், கராச்சியிலுள்ள இலங்கை கொன்சுலேற் ஜெனரல் அலுவலகத்திலிருந்து திணைக்களத்திற்கு திரும்பியுள்ளார் | 2013.08.01 |
| திருமதி.எல்.பி.பீரிஸ்.<br>பிரதி வர்த்தக பணிப்பாளர் | உலக வர்த்தக நிறுவனம் மற்றும் சுவிற்சலாந்து, ஜெனிவாவிலுள்ள இலங்கை தூதரகத்தின் நிரந்தர பிரதிநிதியாக இருந்து இலங்கைக்கு திரும்பியுள்ளார். | 2013.08.11 |
| திருஆர்டீ.எஸ்.குமாரத்ன<br>வர்த்தக பணிப்பாளர் | பெல்ஜியம், புருஸல்ஸிலுள்ள இலங்கை தூதரகத்திலிருந்து இலங்கைக்கு திரும்பியுள்ளார். | 2013.09.20 |
| திரு.டீ.ஜீ.ஏ.பி.தர்மபிரிய<br>பிரதி வர்த்தக பணிப்பாளர் | சிங்கப்பூரிலுள்ள இலங்கை தூதரகத்திலிருந்து இலங்கைக்கு திரும்பியுள்ளார். | 2013.08.26 |

| | | |
|---|---|---|
| திரு.எச்.எம்.பி.ஹேரத்<br>பிரதி வர்த்தக பணிப்பாளர் | கனடா, ரொறொன்ரோவிலுள்ள இலங்கை கொன்சுலேற் ஜெனரல் அலுவலகத்திலிருந்து திரும்பி வந்து பாகிஸ்தான், கராச்சியிலுள்ள இலங்கை கொன்சுலேற் ஜெனரல் அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார். | 2013.09.13 |
| திரு.எஸ்.எம்.சீ.டீ.யட்டோகொ<br>பிரதி வர்த்தக பணிப்பாளர் | தென் கொரியா, சியோலிலுள்ள இலங்கை தூதரகத்திலிருந்து இலங்கைக்கு திரும்பியுள்ளார். | 2013.09.30 |
| திரு.திருமதி.உசட்.ஏ.எம்.சாபி<br>பிரதி வர்த்தக பணிப்பாளர் | மலேசியா, கோலாலம்பூரிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்திலிருந்து இலங்கைக்கு திரும்பியுள்ளார். | 2013.10.01 |
| திரு.எம்.சோமசேன<br>பிரதி வர்த்தக பணிப்பாளர் | ஜப்பான் ரோக்கியோவிலுள்ள இலங்கை தூதரகத்திலிருந்து இலங்கைக்கு திரும்பியுள்ளார் | 2013.12.31 |

| தலைப்பு இல. 295<br>அமைச்சு/திணைக்களம் : வர்த்தக திணைக்களம்<br>நிகழ்ச்சித்திட்ட இல. 01<br>கருத்திட்ட இல. 01<br>மீண்டுவரும் செலவினம் | | | | | |
|---|---|---|---|---|---|
| விபரணம் | (2012) உண்மை செலவினம் (ரூபா) | (2013) அங்கீகரிக்கப் பட்ட மதிப்பீடு (ரூபா | (2013) மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு (ரூபா) | (2013) உண்மை செலவினம் (ரூபா | சேமிப்பு (ரூபா) |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 26,823,235 | 34,750,000 | 32,950,000 | 31,015,639 | 1,934,361 |
| ஏனையவைகள் | 54,490,223 | 61,226,000 | 63,026,000 | 61,627,657 | 1,401,343 |
| **மொத்தம்** | **81,313,458** | **95,976,000** | **95,,976,000** | **92,640,296** | **3,335,704** |

**வருடாந்த கணக்குகள்: பக்கம்**

| மூலதன செலவினம் | | | | | |
|---|---|---|---|---|---|
| **விபரணம்** | **('000) உண்மை செலவினம் (2012)** | **('000) மதிப்பீட்டு செலவினம் (2013)** | **('000) மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு (2013)** | **('000) உண்மை செலவினம் (2013)** | **சேமிப்பு (2013)** |
| **மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும்** | **433** | **600** | **600** | **111** | **489** |
| பொறி, இயந்திரங்களும் உபகரணங்களும் (2002) | 299 | 400 | 400 | 20 | 380 |
| வாகனங்கள் (2003) | 134 | 200 | 200 | 91 | 109 |
| **மூலதனச் சொத்துக்களின் கொள்ளல்** | **828** | **3325** | **4325** | **4050** | **275** |
| வாகனங்கள் (2101) | 0 | 300 | 300 | 150 | 150 |
| தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (2012) | 780 | 2725 | 3725 | 3665 | 60 |
| இயந்திரங்கள் (2013) | 48 | 300 | 300 | 235 | 65 |
| **மனித வள அபிவிருத்தி** | **322** | **500** | **500** | **212** | **288** |
| பதவியினர் பயிற்சி (2401) | 322 | 500 | 500 | 212 | 288 |
| **ஏனைய மூலதன செலவுகள்** | **5420** | **7000** | **6000** | **4595** | **1405** |
| முதலீடுகள் (2502) | 5420 | | | | |
| **மொத்தம்** | **7003** | **11425** | **11425** | **8968** | **2457** |